# மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின்

# 2021-2022-ம் நிதி ஆண்டு அறிக்கை

**(Annual Report)**

அரசாணை (எம்.எஸ்) எண்.57, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.19.05.2017, அரசாணை (எம்.எஸ்) எண்.90, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.27.07.2017 மற்றும் அரசாணை (எம்.எஸ்) எண்.81, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.14.08.2018-ன்படி உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க. எண்.764/2017-கனிமம், நாள்.12.09.2017-ன்படி மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையானது கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டு, இவ்வறக்கட்டளையானது ஆவண எண்.119/2017/BK4, நாள்.21.09.2017-ன்படி தல்லாகுளம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | நிர்வாகக் குழு அமைப்பு | வ.எண் | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், மதுரை | 1. | மாவட்ட ஆட்சியர்,மதுரை |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், மதுரை | 2. | மாவட்ட வருவாய் அலுவலர்,மதுரை |
| 3. | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, மதுரை. | 3. | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, மதுரை. |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை | 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை |
| 5. | துணை இயக்குநர், (சுகாதாரம்), மதுரை | 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், (வளர்ச்சி), மதுரை |
| 6. | முதன்மைக் கல்வி அலுவலர், மதுரை | 6. | உதவி இயக்குநர் (பஞ்சாயத்து), மதுரை |
| 7. | மாவட்ட கருவூலஅலுவலர், மதுரை | 7. | மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர், மதுரை |
| 8. | மாவட்டசமூகநலஅலுவலர், மதுரை | 8. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், மதுரை |
| 9. | உதவி இயக்குநர் (பஞ்சாயத்து),மதுரை | 9. | மாவட்ட வன அலுவலர்,மதுரை |
| 10. | திரு. எ. ரவீந்திரன்,<br>எண். 30, சங்கர்நகர் 3வது தெரு, கோ.புதூர், மதுரை<br>(அரசுசாரா அலுவலர்) | 10. | முதன்மைப் பொறியாளர்,<br>பொ.ப.து,நீ.ஆ.அ,மதுரை |
| 11. | திரு. எஸ்.எல். சொக்கலிங்கம்,<br>கூடுதல் இயக்குநர், (ஓய்வு),<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>சென்னை | 11. | உதவி இயக்குநர், நில அளவை, மதுரை |

| | | | |
|---|---|---|---|
| | | 12. | மாவட்ட கருவூல அலுவலர்,மதுரை |
| | | 13. | மாவட்ட சமூக நல அலுவலர், மதுரை |
| | | 14. | துணை இயக்குநர், (சுகாதாரம்), மதுரை |
| | | 15. | இணை இயக்குநர், (வேளாண்மை), மதுரை |
| | | 16. | தொழிலாளர் ஆய்வாளர், மதுரை |

மதுரை மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, பாரத ஸ்டேட் வங்கி, வணிகவரி அலுவலக கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண். 37193268816) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளைக்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் 16 பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமங்களும், 68 சிறு கனிம குவாரி (96 கிரானைட் குவாரிகள் நீங்கலாக) குத்தகை உரிமங்களும் நடப்பிலுள்ளன. நடப்பிலுள்ள 16 பெருங்கனிம உரிமங்களும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் இசைவு பெற்று சமர்ப்பிக்காத காரணத்தினாலும், வேறு சில காரணங்களுக்காகவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் நடப்பிலுள்ள 68 சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் 111 கிராம ஊராட்சிகள் சுரங்கப் பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.03.2022 வரை **ரூ.4,49,39,797/- (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்து ஒன்பது இலட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று தொன்னூற்று ஏழு மட்டும்)** வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதில் 2021-2022 ஆண்டிற்கு மட்டும் **ரூ.97,91,495/- (ரூபாய் தொன்னூற்று ஏழு இலட்சத்து தொன்னூற்று ஒன்றாயிரத்து நானூற்று தொன்னூற்று ஐந்து மட்டும்)** கனிமக் கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் நிதியாண்டில் மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக நிர்வாக மற்றும் நிதிசார்ந்த ஒப்புதல் ஏதும் வழங்கப்படவில்லை.

இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சென்னை அவர்களின் நேர்முக கடிதம் ந.க.எண்.3946/LC/2015, நாள்.17.03.2020-ன்படி ஒவ்வொரு மாதமும் வசூல் செய்யப்படும் தொகையில் நிர்வாக செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட 6% தொகையை தனி வங்கி கணக்கிற்கு மாறுதல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி மதுரை மாவட்ட கனிம அறக்கட்டளை வங்கி கணக்கு தொடங்கிய நாள் 26.09.2017 முதல் 31.03.2022 வரை நிர்வாக செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டது போக மீதமுள்ள தொகை **ரூ.12,90,645/- (ரூபாய் பன்னிரண்டு இலட்சத்து தொன்னூராயிரத்து அறுநூற்று நாற்பத்து ஐந்து மட்டும்)** தனி வங்கி கணக்கிற்கு **(மாநில பாரத வங்கி, வணிகவரி வளாக கிளை, சேமிப்பு கணக்கு எண்.39383933861)** மாற்றப்பட்டுள்ளது.

மதுரை மாவட்ட கனிம அறக்கட்டளைப் பணிகளை செவ்வனே செய்திடவும், கணினியில் தட்டச்சு செய்திடவும் தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண். 02/2020-டிஎம்எப்டி, நாள்.17.08.2020-ன்படி 17.08.2020 முதல் 16.07.2021 வரையிலான பதினோரு மாத காலத்திற்கு கணக்காளரர் (Accountant) ஒருவரையும், தரவு நுழைவு செய்பவர் (Data Entry Operator) ஒருவரையும், தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.02/2020-டிஎம்எப்டி, நாள்:16.11.2020-ன்படி 16.11.2020 முதல் 15.10.2021 வரையிலான காலத்திற்கு மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளைக்கு நீதிமன்ற தொடர்பு அலுவலர் (Liaison Officer) ஒருவரையும் தற்காலிக நியமனம் செய்யப்பட்டது.

<u>2021-2022 நிர்வாக செலவுகள் செய்யப்பட்ட விபரம்:</u>

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பு (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | கணக்காளர், கணிணி இயக்குபவர் மற்றும் நீதிமன்ற தொடர்பு அலுவலர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட ஊதியம் | ரூ.2,39,546/- |
| 2. | அரசாணை பல்வகை எண். 112, தொழில் (எம்.எம்.டி-1) துறை நாள்: 30.05.2019-ன்படி இயக்குநரகத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட 1% நிதி | ரூ.19,760/- |
| 3. | மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் ஆணைக்கிணங்க மாவட்ட எல்லைகளில் CCTV பொருத்துவதற்காக செலவு செய்யப்பட்ட தொகை | ரூ.41,57,954/- |
| | **மொத்தம்** | **ரூ.44,17,260/-** |

இவ்வறிக்கையானது மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் மேலாண்மை மற்றும் நிர்வாக குழு முன்பு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டது.

தலைவர், மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு
அறக்கட்டளை / மாவட்ட ஆட்சித்தலைவர்,
மதுரை.